DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.819/2024

PROSECUTION WITNESS L.W.1/ P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | A.R.பாஸ்கர் | தகப்பனார் பெயர் | ராமச்சந்திரன் |
| கிராமம் | கொல்லம்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | உர வியாபாரம் | வயது | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 09.09.2025**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கொல்லம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். உர வியாபாரம் செய்து வருகிறேன்.

2) ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த வருடம் 09 ம் மாதம் ஆஜர் எதிரி என்னுடைய ஐஸ்கீரிம் கடைக்கு வந்து பாப்கார்ன் மிஷினை உடைத்துவிட்டார். ஐஸ்கிரீம் மிஷினை ஒரு கட்டையால் அடித்ததில் சிறிது சேதாரம் ஏற்பட்டது. என் மேஜையின் மீது இருக்கும் பொருட்களை எடுத்து என்னை அடித்தார். அங்கிருந்த கத்தியை எடுத்து என்னை குத்த வந்தார். அங்கிருந்த நபர்கள் ஆஜர் எதிரியை பிடித்துக் கொண்டார்கள் அதனால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. அங்கிருந்த எனது வண்டியை கீழே தள்ளி அதன் சாவியை எடுத்து எதிரே இருந்த ஆசிரமத்திற்குள் போட்டுவிட்டார். ஆஜர் எதிரி மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). படிவம் 91 ல் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புகார் கொடுக்கும்போது போலீசார் கேட்டுக் கொண்டதன்பேரில் கையொப்பம் செய்தேன். நான் தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். வழக்கை மேல் நடத்தவிருப்பமில்லை. சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில்**

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.09.10 17:59:13 +0530

**செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:**

1) கடந்த 18.10.2024 ம் தேதி, இரவு 8.00 மணிக்கு நான் கடையில் இருந்தேனா என்றால் ஆமாம். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி என்னை பார்த்து கண்டாரோழி தேவிடியா பையா என தகாத வார்த்தையால் திட்டி, எங்கடா என் பொண்டாட்டிய வச்சிருக்க என்று தரக்குறைவாக பேசி, சட்டையை பிடித்து இழுத்து கீழே தள்ளினாரா என்றால் ஆமாம். பின்னர் ஆஜர் எதிரி கையால் முதுகில் குத்தியும், காலால் உதைத்தாரா என்றால் ஆமாம். அதை பார்த்த அங்கிருந்த நபர்கள் விலக்கிவிட்டு சமாதானம் செய்தார்களா என்றால் விலக்கிவிட்டார்கள். பின்பு ஆஜர் எதிரி என்னை பார்த்து உன்னை என்ன செய்ய போகிறேன் என்று கூறி கடையிலிருந்த கத்தியை எடுத்து என்னை குத்த வந்தாரா என்றால் ஆமாம். அதை பார்த்து நவீனும், அஸ்ரப்பும் எதிரியை பிடித்து கத்தியை பிடுங்கிக் கொண்டார்களா என்றால் ஆமாம். எதிரியின் மனைவி உஷா எதிரிக்கு பணம் தராததால் உஷாவை காரணம் காட்டி பணம் பறிக்கும் நோக்கத்திலேயே என்னை கொல்வதாக அச்சுறுத்தி வந்தாரா என்றால் பணம் சம்மந்தமாக எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. எதிரி என் பொண்டாட்டி பணம் கொடுக்காட்டி என்ன நீ அந்த பணத்தைக் கொடு இல்லாட்டி கொன்றுவிடுவேன் என மிரட்டினாரா என்றால் இல்லை. மீண்டும் 20.10.2024 ம் தேதி, இரவு 10.00 மணிக்கு மாணிக்க வாசகர் காலணியில் உள்ள எனது வீட்டிற்கு ஆஜர் எதிரி வந்து கதவை தட்டி மிரட்டினாரா என்றால் கேட்டிற்கு வெளியே நின்று சத்தம்போட்டார். எதிரி எனக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருவதால் அவரின் மீது தாலுக்கா காவல்நிலையத்தில் புகார் அளித்துவிட்டு, எதிரி என்னை மிரட்டுவதற்கு பயன்படுத்திய கத்தியை படிவம் 91 ன் மூலம் காவல்நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு, தற்போது எதிரியுடன் சமாதானமாக செல்வதால் எதிரி மீது மேல் நடவடிக்கை தேவையில்லை எனவும் சாட்சியமளிக்கிறேன் என்றால் ஆமாம்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் கொடுத்த புகாரில் எந்த இடத்திலும் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். எனக்கு தமிழ் எழுதத் தெரியாது. எதிரி ஐஸ்கிரீம் மிஷினை உடைத்ததாகவும், கத்தியை கொண்டு என்னை குத்த வந்ததாகவும் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் முழுமையாக என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. படிவம் 91 ல் முழுமையாக என்ன எழுதப்பட்டுள்ளது என்பது

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.09.10 17:59:18 +0530

எனக்கு தெரியாது என்றால் என்னை அடிக்க வந்தது சம்மந்தமாக எழுதப்பட்டுள்ளது. எதிரி மீது எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்றால் ஆமாம். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நானோ அல்லது எதிரியோ சம்பவ இடத்திலேயே இல்லை என்றாலும், முன் பகை காரணமாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.09.10 17:59:23 +0530

Judicial Magistrate No.I,

Erode.